**கிழக்கு மாகாண பொதுச் சேவையின்**
**விவசாயப்போதனாசிரியர், தரம் III இற்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2021**

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயப் போதனாசிரியர், தரம் III பதவிக்கு மாகாண ரீதியாக பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2021.03.31** ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னர் விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரால் நடாத்தப்படும்.

2. **ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:**

**2.1.** இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

**2.2.** இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக செயலாளர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப் படும் எழுத்துமூல போட்டிப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப்புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் நேர்முகப்பரீட்சையின் மூலம் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**2.3.** இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

**2.4.** மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின் திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது புது நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

3. **தகைமைகள்:**

**3.1. பொதுவான தகைமைகள் :**

3.1.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

3.1.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

3.1.3. மதச்சார்புடைய பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆள் ஒருவர் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

3.1.4. குறைந்த பட்ச வயதெல்லை மற்றும் உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**3.2 கல்வித் தகைமைகள் :**

3.2.1 கல்விப் பொதுத்தராதர (சா/த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் ஆகியவற்றில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**3.3. தொழில்சார் தகைமைகள் :**

அ. குண்டசாலை, அங்குனகொலபெலெஸ்ஸ, பெல்வெஹெர, பிபிலை, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அநுராதபுரம், கரபிஞ்ச போன்ற ஏதேனும் ஒரு விவசாயக் கல்லூரியினால் வழங்கப்படும் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

ஆ. ஹார்டி தொழிநுட்பக் கல்லூரியினால் வழங்கப்படும் விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

இ. அரச அங்கீகாரம் பெற்ற ஏதேனும் ஒரு நிறுவனத்தினால் வழங்கப்படும் இரண்டு (02) வருட விவசாய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**அல்லது**

ஈ. மேற்படி தகைமைகளுக்குச் சமமானது என இலங்கை தொழிநுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய வேறு ஏதேனும் தகைமையைக் கொண்டிருத்தல்.

**3.4. சேவை அனுபவம்** :
கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தில் ஆரம்ப சேவை வகுதி அல்லது அதற்கு மேலுள்ள தர வகுதிக்குள் **திணைக்களப் பதவியில்** நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் அல்லது அதற்கு சமமான பதவியில் குறைந்தது 05 வருடங்கள் வினைத்திறனானதும், திருப்திகரமான சேவையை பெற்றிருத்தல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு முறை :**

**4.1.** கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென நேர்முகப்பரீட்சையில் தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முக பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்படமாட்டாது. கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே எழுத்துப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக தீர்மானிக்கப்படும்.

**4.2.** அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்கள் என அடையாளங்காணப்பட்டவர்களது விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**4.3.** எழுத்து மூலப் பரீட்சையில் சித்திபெற்று அத்துடன் நேர்முகப் பரீட்சையிலும் தமது தகைமைகளை நிரூபித்த விண்ணப்பதாரர்கள் கிழக்கு மாகாண பொதுச்சேவையின் விவசாயப் போதனாசிரியர் தரம் III பதவிக்கு அமர்த்தப்படுவார்கள். இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை MN3-2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா. 31,040 – 10 x 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 - 57,550 ஆகும்.

**4.4.** நிலவும் வெற்றிடங்களில் 30% மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

5. **விண்ணப்பிக்கும் முறை :**

**5.1.** இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 5.0 வரை முதலாம் பக்கத்திலும், இல. 6.0 தொடக்கம் 11.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**5.2.** **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாதவையும் உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**5.3.** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அக் கையொப்பமானது உரிய பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

**5.4.** முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2021.03.31** ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் மட்டும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்களை நேரடியாக கையளிப்பதை தவிர்க்குமாறு. கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்).**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி, திருகோணமலை

**5.5.** விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/21/04** என்பதை குறிப்பிடுவதோடு **"விவசாய போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2021"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

**5.6.** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

6. **பரீட்சைக்கு தோற்றுதல்:**

**6.1.** அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

**6.2.** பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி இந்த விளம்பரத்தின் **5.3ஆம்** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**6.3.** பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

**குறிப்பு : பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.**

7. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :**

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.
ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).
இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

8. **பொய்யான தகவல்களை வழங்குவதற்குரிய தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

9. **பரீட்சை முறையும் பரீட்சை மொழி மூலமும் :**

**9.1.** இப்பரீட்சை இரண்டு வினாப்பத்திரங்களை கொண்டமைவதோடு சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 100 | 1 மணித்தியாலம் | 40% |
| தொழில்நுட்ப மற்றும் விடய அறிவு | 100 | 2 மணித்தியாலம் | 40% |

**நுண்ணறிவு :**

விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியிலான சிந்தனை ஆற்றல், பகுப்பாய்வுத்திறன்கள், நேர முகாமைத்துவம் என்பன பரீட்சிக்கும் வினாக்களை இவ் வினாப்பத்திரம் கொண்டிருக்கும்.

**தொழில்நுட்ப மற்றும் விடய அறிவு:**

பின்வருவன தொடர்பாக விண்ணப்பதாரிகள் கொண்டுள்ள அறிவைப் பரீட்சிக்கும் வினாக்களை இவ்வினாப் பத்திரம் கொண்டிருக்கும்.

(i) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் பங்கு.
(ii) இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு.
(iii) மண் மற்றும தாவர போசணை
(iv) நெல் உற்பத்தி செய்தல்
(v) ஏனைய களப் பயிர்கள் உற்பத்தி செய்தல்
(vi) மரக்கறி வகைகள் உற்பத்தி செய்தல்
(vii) பழங்கள்
(viii) பயிர்களைப் பாதுகாத்தல்
(ix) மண் பாதுகாப்பின் முக்கியத்துவமும் பல்வகைப்பட்ட மண் பாதுகாப்பு முறைமைகளும்
(x) நீர்ப்பாசன முறைமைகளும் நீர் முகாமைத்துவமும்
(xi) பண்ணைப் பொறிமுறை
(xii) தேனி வளர்ப்பு
(xiii) பூமரங்கள் வளர்த்தலும் நில அலங்காரமும்
(xiv) பாதுகாப்புப் பயிர் உற்பத்தி
(xv) கால்நடைப் பராமரிப்பு
(xvi) விவசாய விருத்தி
(xvii) இழைய (tissue) வளர்ப்பு
(xviii) பயிர்த் தொற்றுநோய்த் தடுப்பு பற்றிய அறிவு
(xix) தாவரப் பாதுகாப்பின் முக்கியத்துவமும் (தாவரங்கள் / மரபியல் திரவவிழையம் (plasma) ) தாவரப் பாதுகாப்பு முறைமைகளும்.
(xx) மரபணு தொழிநுட்பம்

(xxi) விவசாய அபிவிருத்தி
- தற்கால விவசாய அபிவிருத்திக் கொள்கைகள் மற்றும் அவற்றில் காணப்படும் முக்கிய விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்.
- விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய மாகாண விவசாய அமைச்சின்கீழ் காணப்படும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள்.
- மத்திய அரசின் விவசாயத் திணைக்களத்தின்கீழ் காணப்படும் நிறுவனங்கள், நிலையங்கள் மற்றும் பிரிவுகள் அத்துடன் அவற்றின் தொழிற்பாடுகள்
- விவசாயத் துறையில் காணப்படும் தற்கால சவால்கள் மற்றும் பிரச்சினைகள்.
- நாட்டின் அபிவிருத்திக்கு விவசாய அபிவிருத்தி எவ்வாறு உதவுகின்றது.

**9.2.** பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படும்.

10. **பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 500/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். பற்றுச்சீட்டுகள் ஒட்டப்படாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது. **அதேபோன்று காசுக் கட்டளைகளும் முத்திரைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

11. பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| **நகரம்** | **நகர எண்** | **நகரம்** | **நகர எண்** |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

12. நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

14. இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இன் ஆலோசனையின் படி கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் மேற்கொள்ளப்படும்.

**எம்.வை. சலீம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.
**2021.03.10**

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**EX/Rec/21/04**

(அலுவலக உபயோகத்திற்கு)

**கிழக்கு மாகாண பொதுச் சேவையின்**

**விவசாயப்போதனாசிரியர், தரம்-III இற்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை – 2021**

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T,** சிங்களம் - **S**
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** ………………………………..

1.0. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர்: திரு/திருமதி/செல்வி ………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு உதா: MR.PERERA,A.B.C)

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்: ………………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

1.3. முழுப்பெயர் : ……………………………………………………………………
(தமிழில்)

1.4. பால் : பெண் - F / ஆண் - M
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………

2.0. 2.1. நிரந்தர முகவரி : ……………………………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ……………………………………………………………………
(தமிழில்)

2.3. அனுமதியட்டை அனுப்ப வேண்டிய முகவரி :- ……………………………………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ……………………………………………………………………

3.0. 3.1. தேசிய அடையாள அட்டை இல.

3.2. பிறந்த திகதி : ஆண்டு மாதம் திகதி

3.3. 2021.03.31 திகதியில் வயது : வருடங்கள் மாதம் நாட்கள்

4.0. கல்வித்தகைமைகள் :

4.1. க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :

I. பரீட்சையின் வருடம் :………………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :………………………

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.0. தொழில்சார் தகைமைகள்
விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் டிப்ளோமா பெற்றிருப்பின்,

I. நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………………
II. டிப்ளோமா : ……………………………………………………………………
III. டிப்ளோமா பெற்ற திகதி : ……………………………………………………………

6.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக: ………………………………………………………………………..

7.0. கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தில் வகிக்கும் பதவி தொடர்பான விபரம்,

7.1. சேவை நிலையம் : ………………………………………………

7.2 பதவி : ………………………………………………

7.3 பதவியில் நியமிக்கப்பட்ட திகதி : ………………………………………………

7.4. பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ………………………………………………

7.5. 2021.03.31 தற்போது வகிக்கும் பதவியின் சேவைக்காலம் : ………………………………………………

8.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு இங்கு ஒட்டவும் தொடர்பான விபரங்கள.

| பற்றுச்சீடினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

9.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

10.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 5.3 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :………………………………
பதவி :……………………………………………………………
முகவரி :…………………………………………………………
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

11.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை:**

இவ் விண்ணப்பதாரியாகிய திரு./ திருமதி/ செல்வி ........................................................................................ என்பவர் இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும், அவர் .................................................................. பதவியில் சேவையாற்றுகின்றாரெனவும். அவர் நிரந்தரமான பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரெனவும், அவர் 2021.03.31 ஆந் திகதியன்று .................................... ஆண்டுகள் வினைத்திறனான , திருத்திகரமான சேவைக் காலத்தினை பூர்த்திசெய்துள்ளாரெனவும், இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும், அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவெனவும் இப்பரீட்சை சம்பந்தமான அறிவித்தலில் காணப்படும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

……………………………………
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி : ……………………………………………….
முழுப் பெயர் : ……………………………………………….
பதவி : ……………………………………………….
முகவரி :……………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)